இன்று(26.06.2020) திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாய சங்க பிரதிநிதிகள் ஆலோசனை கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி. கே.பழனிசாமி அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு அம்மாவினுடைய அரசு வேளாண்மைத்துறைக்கு அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி தந்துள்ளது. கடந்த 9 ஆண்டு காலமாக விவசயாய துறையில் என்னென்ன பணிகள் நடைபெற்றுள்ளது என்பது நன்கு தெரியும். குடிமராமத்து என்ற திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு குளங்கள், ஏரிகள், ஆகியவை தூர்வாரப்படுகின்றன. கடந்த 4 ஆண்டுகளில் 1433 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 6278 குளங்கள் ஏரிகள் தூர்வாரப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறைக்கு சொந்தமாக 24 ஆயிரம் ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகள் அனைத்தையும் ஒரே சமயத்தல் தூர்வாரி சீரமைப்பது என்பது இயலாத காரியம் என்பதால் ஆண்டுக்கு குறிப்பிட்ட ஏரிகள் தூர்வாரப்படுகிறது. மழைக்காலங்களில் பெய்கின்ற மழைநீர் விணாகாமல் தடுப்பதற்காக ரூபாய் 1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 3 ஆண்டு திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வு பெற்ற 3 தலைமைப் பொறியாளர்கள், 2 கண்காணிப்பு பொறியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு முழுவதும் ஆய்வு மேற்கொண்டு எங்கெங்கு தடுப்பணைகள் கட்டப்பட வேண்டும் என்ற அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்கவுள்ளார்கள். அதன்அடிப்படையில் ஆறுகள், ஓடைகள் குறித்து தேவையான இடங்களில் தடுப்பணைகள் கட்டப்படும்.

முக்கொம்பில் உடைப்பு ஏற்பட்டு அதை சீர் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. சுமார் 40 சதவீத பணிகள் நடைபெற்று முடிந்துள்ளது. மீதமுள்ள பணிகள் விரைந்து முடிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு அதிக அளவு வறட்சி நிவராணம் வழங்கிய அரசு அம்மாவின் அரசு. சுமார் 2325 கோடி ரூபாய் வறட்சி நிவராணமாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோல பயிர்க்காப்பீடு திட்டத்தின் கீழ் அதிக அளவு விவசாயிகளுக்கு காப்பீடு பெற்று தந்த அரசு அம்மாவின் அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். பழங்கள், காய்கறிகள் மற்றும் பிற அழுகும் பொருட்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் விநியோக தொடர் மேலாண்மைத் திட்டம் கிருஷ்ணகிரி, தர்மபுரி, கோயமுத்தூர், நிலகிரி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தேனி, ராமநாதபுரம் தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களல் இத்திட்டம் 482.36 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய அம்சமாக அறுவடைக்கு பின் ஏற்படும் இழப்பு குறைத்தல், விவசாயிகளுக்கு சந்தை வசதி, விவசாயிகளுக்கு உரிய வருமானம் கிடைக்க வழிவகை ஆகியவை ஏற்படுத்தி தருவதாகும்.

கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக அரசுக்கு பல்வேறு வகையில் இதுவரை 35,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. தமிழக அரசுக்கு ஒரு மாதத்திற்கு 24,000 கோடி ரூபாய் வருமானம் இருந்தால் தான் அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குதல், ஏற்கனவே அறிவித்த திட்டப்பணிகள் நிறைவேற்றுதல் போன்றவற்றை மேற்கொள்ள முடியும். சராசரியாக ஒரு மாதத்திற்கு 14,000 கோடி ரூபாய் இந்த கொரோன காலத்தில் அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதே நிலையில் பார்த்தால் ஒரு ஆண்டிற்கு சுமார்

**85,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என கணக்கிடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**விவசாய சங்கத்தை சார்ந்த நிர்வாகிகள் பல்வேறு கோரிக்கைகளை என்னிடம் அளித்துள்ளீர்கள். உங்கள் கோரிக்கைகள் அனைத்து உரிய காலத்தில் நிறைவேற்றித்தரப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**-----------------**